1986 மே 13]

வேளச்சேரியில் விளையாட்டு திடல்.

765—(வினா எண். 8201) திரு. சு. பாலன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த வேளச்சேரியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, அகில உலக கால்பந்துப் போட்டிகள், நேருவின் பெயரால், கடந்த ஆண்டு சென்னையில் நடத்துவதாக இருந்தது. வேளச்சேரிக்குப் பக்கத்திலுள்ள தரமணியில் பெரிய இடத்தை கையகப் படுத்தி அங்கே விளையாட்டுத் திடல் அமைக்கப்பெற்று கடந்த ஆண்டு அங்கு கால்பந்து ஆட்டத்தை நடத்துவதற்கு அரசு உத்தேசித்து இருந்தது. அமைச்சர் அவர்கள் இப்போது இல்லை என்று சொல்கிறார்கள். அது ஏன் கைவிடப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலை நெருக்கடி காரணமாக இப்போது அந்த ஆலோசனை கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1988 ஆம் ஆண்டு அகில உலக கால்பந்துப் போட்டி நடத்துவதாக உறுதியளித்திருக்கிறார்கள். அதையாகிலும் நடத்துவதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் போட்டி நடத்துகிறவர்கள் வேறுவிதமான முறையில் நடத்துவதற்கு முன்வந்தால் அதற்கு வேண்டிய உதவியை அரசாங்கம் செய்யும்.

திரு. சைதை சா. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான விளையாட்டு மைதானங்கள் போதிய அளவிற்கு பராமரிப்பு வசதிகள் இல்லாதிருக்கிற காரணத்தினால் தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சித் துறை சார்பாக அந்த விளையாட்டுத் திடல்களை எடுத்து பராமரித்து கால்பந்து, கைப்பந்து, கிரிக்கட் போன்ற இப்படிப்பட்ட விளையாட்டுக்களை ஊக்குவிக்கிற

[1986 மே 13

வகையில் உடல் பயிற்சிச் சாதனங்கள் அமைத்துத் தந்து மாண வர்களும் மற்றவர்களும் மாலை நேரங்களில் அங்கு பயிற்சி செய்ய வழிவகை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சியை விளையாட்டுத் துறை கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரிக்கு அருகிலே குதிரைப் பந்தய மைதானம் இருக்கிறது. பல நூறு ஏக்கர் நிலங்கள் சும்மாக் கிடக்கிறது, அது ஒரு பெரிய மைதானமாக இருப்பதாலும், கட்டட வசதி இருப்பதாலும், அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டியை அல்லது ஒலிம்பிக் போட்டியை அந்த இடத்தில் நடத்துவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளியில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் அல்லது செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ? நடப்பாண்டில் அது செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு அரங்குகள் அமைப்பது என்ற ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து விளையாட்டுத் துறை மூலம் சில இடங்களில் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆரம்பிக்கிற அளவிற்கு இப்போது நாம் தேவையை உருவாக்கவில்லை. முதலில் தேவையை உருவாக்கிவிட்டு பிறகு அதைப்பற்றி நாம் பேசலாம்.

முற்பகல் 9-30

இலக்குமிபுரம் கலை விஞ்ஞானக் கல்லூரி.

766—(வினா எண். 8984) திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், இலக்குமிபுரம் கலை விஞ்ஞானக் கல்லூரியை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விபரம் என்ன?